[28th February 1963

Primary Health Centres

* 92 Q.—SRI R. S. VEERAPPA CHETTIAR : Will the Hon. the Minister for Public Health be pleased to state—

(a) whether there is any proposal to appoint lady doctors in all the Primary Health Centres in the Panchayat Union Council areas; and

(b) if so, the details thereof?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் :(a) இல்லை. (b) எழாது.

திரு. ரா. சு. வீரப்ப செட்டியார் : ப்ரைமரி சுகாதார நிலையங்களில் உள்ள டாக்டர்கள் பிற்பகல் நேரங்களில் வெளியில் சென்று விடுவதனால் சென்டர்களில் டாக்டர் உதவி கிடைக்காமல் போய் விடுகிறது. ஆகவே மேல் (male) டாக்டர்களையாவது அதிகமாக நியமிக்க அரசாங்கம் முன்வருமா ?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : ஏற்கனவே நியமிக்கப் பட்டிருக்கிறார்கள். வாரத்தில் 3 நாட்களுக்கு அந்த டாக்டர்கள் சப் சென்டர்களுக்குப் போவதனால் மாலை நேரத்தில் அவர்கள் சர்விஸ் ஹெல்த் சென்டரில் கிடைப்பது இல்லை.

திரு. எஸ். மாதவன் : அதிகாரிகளை லேடி டாக்டர்கள் போடும் படி கேட்டால் நீங்கள் பார்த்துத் தாருங்கள் என்று சொல்லு கிறார்கள். காரணம் லேடி டாக்டர்களின் எண்ணிக்கை குறைவாக இருக்கிறது. ஆகவே பெண்களுக்கு என்று மருத்துவக் கல்லூரி ஒன்றை ஏற்படுத்த அரசாங்கம் முன்வருமா ?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : லேடி டாக்டர்களின் எண்ணிக்கை குறைவாகத்தான் இருக்கிறது. அதற்காக பெண் களுக்கு என்று தனியாகக் கல்லூரி ஏற்படுத்துவது இயலாத காரியம்.

திரு. டி. கார்ச்சா கவுடர் : சார், லேடி டாக்டர்களுக்குக் கிராக்கி வர வர அதிகமாக ஏற்பட்டு வருவதால், இந்த ஆண்டு மெடிகல் காலேஜில் பெண்களை அதிகமாகச் சேர்க்க கனம் அமைச்சர் அவர்கள் ஏற்பாடு செய்வார்களா ?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : மெடிகல் காலேஜில் பெண்களுக்காக ஏற்கனவே 20% ஒதுக்கியிருக்கிறோம்.

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் : கனம் தலைவர் அவர்களே, ஒவ்வொரு பஞ்சாயத்து யூனியன்களிலும் இருக்கக்கூடிய பிரைமரி ஹெல்த் சென்டர்களில் பிரசவக் கேஸ்கள் அதிகமாக வரும் காரணத்தால் இனிமேலாவது அங்கெல்லாம் லேடி டாக்டர்களைப் போட அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா ?

கனம் சபாநாயகர் : லேடி டாக்டர்கள் இல்லையே என்று சங்கடப் படுகிறார்கள். அதற்கு என்ன யோசனை என்று ஒருவரும் சொல்லவில்லையே.

28th February 1963]

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம்: லேடி டாக்டர்கள் கிடைக்கும்போது போடப்படும்.

கனம் சபாநாயகர்: கேள்விகள், பதில்கள் முடிவடைந்தன.

[*Note.*—An asterisk (*) at the Commencement of a speech indicates revision be the Member.]

II.—CALLING ATTENTION TO THE EVICTION OF RYOTS FROM LAND IN CERTAIN VILLAGES IN RAMANATHAPURAM DISTRICT.

MR. SPEAKER: The hon. Member, Sri S. Madhavan, will now call the attention of the Hon. Minister for Co-operation to a matter of urgent public importance, viz., the eviction of ryots from Varappur, Vaipuripatti Singampunari, Vannarappu and A. Thekkalur villages, Tiruppattur taluk, Ramanathapuram district, who have been in possession of the lands by virtue of either the grant of pattas or their long possession by the Forest Department under the Indian Forest Act and the distress caused by the evictions and prosecutions launched by the Forest Department.

***திரு. எஸ். மாதவன்:** கனம் தலைவர் அவர்களே, நம்முடைய மாநிலத்தில் 'மெட்ராஸ் பாரஸ்ட் ஆக்ட்' என்று இருக்கிறது. அதிலே, செக்ஷன் (4)-ன் கீழ் எந்தக் காடுகளைச் சர்க்கார் காடுகளாக ஏற்படுத்திக் கொள்ளவேண்டும் என்பதைக் கலெக்டர் மூலம் நோடிபிகேஷன் செய்யலாம் என்று இருக்கிறது. அதே சமயத்தில் செக்ஷன் (6)-இன் படி ஃபாரஸ்ட் செட்டில்மெண்ட் ஆபிசர் நியமித்து, அவர் இந்தக் காடுகளை ஆக்கிரமித்தவர்களுக்குத் தனிப்பட்ட முறையில் நோட்டீஸ் கொடுத்து, செக்ஷன் (8)-இன் கீழ் விசாரணை செய்து உத்தரவு அனுப்பவேண்டுமென்று 'ப்ரொசீஜர்' போடப்பட்டிருக்கிறது. இந்த ப்ரொசீஜரை அதிகாரிகள் கடைப்பிடிக்காத காரணத்தால், குறிப்பாக இராமநாதபுரம் மாவட்டத்தில் பல இடங்களில் ஏற்கனவே ரெவின்யூ டிப்பார்ட்மெண்டில் பட்டா வாங்கியவர்கள் இந்த ஃபாரஸ்ட் ஆக்டின் கீழ் குற்றம் செய்தவர்களாகக் கருதப்பட்டு நோட்டீஸ் கொடுக்காமலேயே அவர்கள் மீது கிரிமினல் வழக்குகள் தொடரப்பட்டு அல்லலுற்றுக் கொண்டிருக்கிறார்கள். என்னுடைய தொகுதியில் இரண்டு பேர் சிறைக்குக் கூடச் சென்றிருக்கிறார்கள். இது பற்றி உடனடியாகப் பரிசீலனை செய்து அதிகாரிகளுக்குத் தெரிவித்து, சட்டப்படி ப்ரொசீஜரைக் கடைப்பிடிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்வதற்காக இந்தக் கவன ஈர்ப்புத் தீர்மானத்தின் மூலமாக கனம் அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

THE HON. SRI N. NALLASENAPATHI SARKARAI MANRADIAR: Sir, consequent upon the abolition of estates under the Madras Estates (Abolition and Conversion into Ryotwari) Act, the Forest Department has taken over estate forest areas in the ex-Zamins for survey and reservation under the Madras Forest Act, 1882. Under this Scheme, it is proposed to extinguish the various rights and privileges, as these forests are now burdened with, beyond their carrying capacity. During the Third Five-Year Plan period, 522 square miles of these areas will be surveyed.